# KTET
# (August 2012)

## Previous Year Paper
### [Set A] [Part-II] [Tamil]

SET A

| Question Paper Booklet Sl.No. | |
|---|---|

# K-TET - August 2012

**Roll No.** | | | | | | |

| **Category - I** | **Part - 2** |
|---|---|

| Question Paper Code | Area/Subjects | No.of Questions | Sl.No.of Questions | Sl.No.of Pages |
|---|---|---|---|---|
| **503** | Tamil | 30 | 91 to 120 | 3 to 10 |

(Candidates for Tamil Only)

Space for Rough Work - Page No. : 2 & 11

Instructions - Page No. : 1 & 12

**Instructions :**

**Candidates are advised to read the following instructions very carefully.**

Non-compliance of any of these may result in cancellation of the answer sheet.

1. Don't open the Booklet seal before time. **Before attempting the papers, the candidates should make sure that no page or question is missing from the question paper**. In case there is any discrepancy, it should be immediately reported to the invigilator incharge for obtaining a complete question paper.
2. Candidates should occupy only the allocated seat at the venue of the allotted centre as per seating plan.
3. **Use only Blue / Black Ball point pen for answering objective (multiple choice) questions on OMR sheet.**
4. No identification mark, other than where asked for, on the OMR sheet, is permitted. If done so, the OMR sheet is liable to be treated as cancelled. The decision of the Secretary, Pareeksha Bhavan in this regard shall be final.
5. If at any stage OMR sheet of a candidate shows or it is otherwise established that he/she has received or attempted to receive help from any source in any manner or has given help or attempted to give help to other candidate in any manner, the relevant OMR sheet and his/her candidature for K-TET-2012 will be cancelled. The decision of the Secretary, Pareeksha Bhavan in this regard shall be final.

Space For Rough Work

## Kerala Teacher Eligibility Test - August, 2012
## Category I – LP Section
## (Part - 2) Tamil

**I. கீழ்வரும் பகுதியை வாசித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

''கல்வி மனிதனைப் பண்படுத்துகிறது. தனிமனித ஒழுகலாற்றினையும் சமுதாய வாழ்வியல் நெறிகளையும் உயரச் செய்கிறது. ஒருமுறை பெற்ற கல்வி ஒருவருக்கு ஏழு தலைமுறைக்கும் பயன் தரும். அத்தகைய கல்விக்கான கற்றல் பொருள் விரிவானதாகவும் செறிவானதாகவும் நடப்பியல் உண்மைகளை உள்ளடக்கியதாகவும் இருத்தல் வேண்டும் வள்ளுவரின் கருத்துப்படி கற்றல் பொருள் யாவும் இருபெரும் பிரிவுகளில் அடங்கும். அவையாவன எண்ணை முதலாகக் கொண்ட கணிதப் பாடப்பொருள்களும் எழுத்தை முதலாகக் கொண்ட மொழிப் பாடப்பொருள்களும் ஆகும். ஒழுக்கம் மனிதன் பெறத்தக்க உடைமைகளில் மிகவும் உயர்ந்ததாகும். ஒழுக்கமுனடயோர் எந்நாளும் உயர்வைப் பெறுவர். ஒழுக்கம் இழந்தோர் இழிந்த பிறப்பினராய்க் கருதப்படுவர். இருள்சேர் இருவினை நீக்கி, இன்பப் பேரொளியாய் ஒளிரும் செம்பொருளைக் காண்பதே அறிவாகும். பிறவிப் பெருங்கடல் நீந்திப் பேரின்ப வீட்டை அடைதலே கற்றதனாலாய பயனாகும்.''

**91.** கல்வியின் இருபெரும் பிரிவுகள் யாவை ?

(A) கல்வி, கேள்வி
(B) படிப்பு, எழுத்து
(C) கணிதம், மொழி
(D) அறிவியல், கணிதம்

**92.** தாழ்ந்த பிறப்பிரைாய்க் கருதப்பவோர் யார் ?

(A) கல்லாதவர்
(B) ஒழுக்கமற்றோர்
(C) திருடர்
(D) கயவர்

**93.** ஏழு தலைமுனறக்கும் பயன் தருவது எது ?

(A) கல்வி
(B) ஒழுக்கம்
(C) அன்பு
(D) கருணை

94. ஒருவன் தான் அடைய வேண்டியதில் மிகவும் உயர்ந்தது எது ?

(A) கல்வி (B) செல்வம்

(C) புகழ் (D) ஒழுக்கம்

95. கற்றலின் பயன் என்ன ?

(A) செல்வம் பெறுதல்

(B) அறிவைப் பெறுதல்

(C) வேலை தேடுதல்

(D) வீடுபேறு அடைதல்

**II. கீழ்வரும் கவிதையைப் படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தேர்ந்தெடுக்கவும்.**

''உதிர்ந்துவிழும் இலைச்சருகு நிலையா வாழ்வை
உணர்த்துகின்ற நுண்கவிதை ! மறவன் போரில்
எதிர் சென்றே ஏற்றவிழுப் புண்கள் எல்லாம்
எந்நாளும் புகழ்பாடும் கவிதை ! வெள்ளிக்
கதிர்வீச்சில் மழைத்திவலை வரைந்து காட்டும்
கவர்ச்சிமிகு வானவில்லோர் கவிதை! பூவில்
கதிராடி உடல்தழுவும் குறும்புத் தென்றல்
தாரத்தின் சக்களத்திக் கவிதை என்பேன் !''

96. நினலயற்ற வாழ்வை எத்தகைய கவிதைக்கு உவனமப்படுத்தலாம் ?

(A) புதுக்கவிதை

(B) நுண்கவிதை

(C) மரபுக் கவிதை

(D) நாட்டுப்புறக் கவினத

97. சக்களத்திக் கவிதை எது ?

(A) புகழ்பாடுதல்

(B) வானவில்

(C) உடல் தழுவும் தென்றல்

(D) அழியும் வாழ்வு

98. ‘திவலை’ என்பதன் பொருள் என்ன ?

(A) கலம்

(B) துளி

(C) நீர்

(D) தூரிகை

99. போர்க்காயம் எதைப்பாடும் ?

(A) கவலையை

(B) கோழைத்தனத்தை

(C) வருத்தத்தை

(D) புகழை

100. இப்பாடலின் மையக்கருத்து என்ன ?

(A) வாழ்க்கை ஒரு கவிதை

(B) வாழ்க்கை நிலையாதது

(C) நாட்டுக்காகப் போராட வேண்டும்

(D) ஒருதார மணம்

**101.** தொடக்கப்பள்ளி நிலையில் தாய்மொழி வாயிலாகக் கற்பித்தல் சிறப்புடையது ஏன் ?

(A) குழந்தைகளின் தன்னம்பிக்கையை வளரச்செய்யும்

(B) கற்றலை எளிமையாக்கும்

(C) குழந்தைகளை இயற்கைச் சூழலில் கற்க உதவும்

(D) அறிவாற்றலை வளர்க்க உதவும்

**102.** வெளியிடும் திறன்கள் இரண்டு. ஒன்று பேசுதல் இன்னொன்று எது ?

(A) படித்தல்

(B) எழுதுதல்

(C) கேட்டல்

(D) உணர்தல்

**103.** மூன்று நான்கு வகுப்புகளில் கற்பித்தலுக்கு ஏற்றதாக உள்ள முறை எது ?

(A) ஒப்படைப்பு முறை

(B) மேற்பார்வை படிப்பு முறை

(C) கள ஆய்வு முறை

(D) வரலாற்று அணுகுமுறை

**104.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வற்றில் தற்காலக் கல்வி முறையில் தேவைப்படும் மாற்றங்களாக நீவிர் கருதுவது எது ?

(A) விரிசிந்தனை

(B) தர்க்க சிந்தனை

(C) குவி சிந்தனை

(D) எதிர்மறை வினை

**105.** ஒரு குழந்தையின் முதல் ஆசிரியர்

(A) சமூகம்

(B) பெற்றோர்

(C) ஆரம்பப்பள்ளி ஆசிரியர்

(D) முன் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்

**106.** ''நிலா நிலா ஓடிவா !

நில் லாமல் ஓடிவா !

மலைமேலே ஏறிவா !

மல்லிகைப்பூ கொண்டுவா !

இது நிலவை அறிமுகப்படுத்தும் ஒரு பாடல் இந்தப் பாடலை எந்தக் கற்பித்தல் முறையில் அறிமுகப்பத்தலாம் ?

(A) விளையாட்டு முறை

(B) விரிவுரை முறை

(C) செயல்திட்ட முறை

(D) நடிப்பு முறை

**107.** வகுப்பில் மாணவர்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்த ஆசிரியர் செய்யவேண்டியது.

(A) கதை கூறுதல்

(B) விவாதித்தல்

(C) வினா கேட்டல்

(D) கரும்பலகையில் எழுதுதல்

**108.** இரண்டாம் வகுப்பிற்குரிய குறைந்தபட்ச மொத்த மொழித் திறன்கள் எத்தனை ?

(A) மூன்று

(B) ஆறு

(C) எட்டு

(D) பத்தொன்பது

**109.** தொடக்கநிலை வகுப்பிலுள்ள மாற்றுத்திறனாளி மாணவன் கதைகூறும்போது புரிந்து கொள்ள முடியவில்லை. நீங்கள் எந்த ஊடகத்தை இதற்காகப் பயன்படுத்துவீர்கள் ?

(A) ஒலி ஒளி ஊடகம்

(B) ஒலி ஊடகம்

(C) பட விளக்கம்

(D) ஒளி ஊடகம்

**110.** கற்றல் வகைகளில் பொருந்தாத ஒன்று

(A) இணைத்துக் கற்றல்

(B) மனப்பாடமாகக் கற்றல்

(C) வாய்மொழிக் கற்றல்

(D) தொடர் கற்றல்

**111.** பவணந்தி முனிவர் எழுதிய நூல் எது ?

(A) திருமந்திரம்

(B) நன்னூல்

(C) வீரசோழியம்

(D) சீவக சிந்தாமணி

112. கீழ்வரும் சொற்களில் பண்புத்தொகை எது ?

(A) கொல்யானை

(B) தற்பெருமை

(C) கார்மேகம்

(D) போர்வீரன்

113. சரியான வாக்கிய அமைப்பு எது ?

(A) ராமுவும் மாடுகளும் வந்தன

(B) ராமுவும் மாடுகளும் வந்தது

(C) ராமுவும் மாடுகளும் வந்தார்

(D) ராமுவும் மாடுகளும் வந்தனர்

114. 2011-க்கான சாகித்ய அக்காதமி பரிசு பெற்றதமிழ் நாவல் எது ?

(A) காவல் கோட்டம்

(B) இலையுதிர்காலம்

(C) சிலநேரங்களில் சில மனிதர்கள்

(D) விஷ்ணுபுரம்

115. ''ஆலும் வேலும் பல்லுக்குறுதி

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'' என்னும் பழமொழியில் வரும் 'இரண்டு' எது ?

(A) திருப்பாவை

(B) திருக்குறள்

(C) திருமுருகாற்றுப்படை

(D) திருவாசகம்

**116.** உங்களை அடிக்கடிக் தொந்தரவு செய்யும் ஒருவரைப்பற்றிக் காவல் துறைக்கு எழுதும் கடிதத்தை என்ன சொல்வீர் ?

(A) மனு (B) புகார்

(C) சிபாரிசு (D) விண்ணப்பம்

**117.** கீழ் வருவனவற்றுள் சரியான சொல் எது ?

(A) பாற்பனன் (B) பார்ப்பனன்

(C) பார்பனன் (D) பாற்ப்பனன்

**118.** ''தமிழனென்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!''

என்று பாடியவர் யார் ?

(A) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

(B) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

(C) நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

(D) பாரதிதாசன்

**119.** கீழ்வருவனவற்றுள் ஆடிமாதத்தில் கொண்டாடும் விழாஎது ?

(A) தீபாவளி (B) ஜல்லிக்கட்டு

(C) பதினெட்டாம் பெருக்கு (D) ஆயுத பூஜை

**120.** கீழ்வரும் சொற்களில் பொருள் அடிப்படையில் வேறுபட்டு நிற்கும் சொல் எது ?

(A) மந்தி (B) வானரம்


(C) கடுவன் (D) பிடி

**Space For Rough Work**

6. For answering questions, candidates are advised to follow instruction strictly given in the question paper and on the OMR sheet.
**7. There will be no negative marking**
8. The candidate must return the question booklet and answersheet (OMR sheet) to the invigilator before leaving the examination centre. However, student must collect carbon/duplicate copy of attempted OMR sheet from Invigilator before leaving the examination hall.
**Don't rub, erase, cut, fold or overwrite on the OMR sheets.**
Cutting or overwriting in any box provided for answering question will be deemed to be an incorrect answer.

## INSTRUCTIONS FOR FILLING THE OMR (ANSWER SHEET)

a. USE ONLY DARK BLUE/BLACK BALL POINT PEN for writing and marking the ovals.
b. To answer questions, dark only one oval (○○○○) with black/dark blue ink, which you consider correct, corresponding to a specific question.
c. Mark your answer in the appropriate oval against the number corresponding to the question you are answering, e.g. correct way to mark answer 10 (C) is:




**d. The following way of marking should be avoided.**



e. If you darken more than one ovals, your answer will be treated as wrong.
f. Do not put any stray mark anywhere on the OMR (answer sheet) other than marking in the chosen response.
g. Do not fold, multiple, tear or wrinkle the answer sheet.
h. Don't use backside of OMR sheet for rough work.
i. Since the sheet will be processed by a machine, write and mark the ovals in the appropriate space only.

**For rough work, use only the pages marked as rough work in the Question Paper Booklet.**

**Signature of the Candidate** **Signature of the Invigilator**